# المحفزات إلى عمل الخيرات

## நல்லறன்களின் பால் தூண்டக் கூடியவைகள்

எல்லாப் புகளும் அல்லாஹ் ஒருவனுக்கே, ஸலாத்தும், சலாமும் நபி (ஸல்) அவர்கள் மீது உண்டாகட்டுமாக!

நன்மையின் வாசல்கள் அதிகம் உள்ளது. சிறந்த அமல்கள் ஏராளமுள்ளது. இறைவன் கூறியதாக நபி (ஸல்) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹுத் தஆலா நற்செயல்களையும், தீய செயல்களையும் எழுதி வைத்துள்ளான். நபி (ஸல்) அவர்கள் இதனை விளக்கும் முகமாக (பின்வருமாறு) சொன்னார்கள்:

'எவர் நற்செயல் ஒன்று செய்ய வேண்டுமென்று நாடி அதனைச் செய்யவில்லையோ (நற்செயல் புரிய வேண்டுமென்ற அம்மனிதரின் எண்ணத்தின் காரணமாக) அதை அல்லாஹ் முழு நற்செயலாக பதிவு செய்து கொள்கிறான். (ஆதாரம் புகாரி முஸ்லிம்)

யார் அதன் பால் ஊக்கம் அழித்து நன்மையின் பால் வழி காட்டுகிறாரோ அவருக்கு மகத்தான கூலி உண்டு. நபி (ஸல்) அவர்கள் அதை பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

யார் நேர்வழியின் பக்கம் அழைக்கிறாரோ அவருக்கு அவரை பின்பற்றியவருடைய (கூலி) நன்மை கிடைக்கிறது. எனினும் அவருடைய நன்மையில் எவ்வித குறையும் ஏற்படாது. மேலும் யார் வழி கேட்டின் பால் அழைக்கிறாரோ அவருக்கு அவரை பின்பற்றியவருடைய தீமை கிடைக்கிறது.எனினும் அவருடைய தீமையில் இருந்து எவ்வித குறையும் ஏற்படாது.

(ஆதாரம் முஸ்லிம்)

நற்கூலிகளைப் பெற்றுத்தரும் சில நல்லறன்கள்:

1- எனது இந்த வுளுவைப் போன்று யார் வுளுச் செய்து, இரண்டு ரக்ஆத்துகளும் தொழுது அவ்விரண்டையும் மன ஒருமையோடு நிறைவேற்றுகிறாரோ அவரின் முன் சென்ற பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது. (ஆதாரம் புகாரி முஸ்லிம்)

2- யார் ஒரு நாளைக்கு பனிரண்டு ரக்ஆத்துகள் தொடராக தொழுது வருகிறாரோ அவர் சுவர்க்கம் நுழைந்து விடுகிறார். ளுஹர் தொழுகைக்குப் பின் நான்கு, அதன் பின் இரண்டு, மஃரிப் தொழுகைக்குப் பின் இரண்டு, இஷாவிற்குப் பிறகு இரண்டு, பஜ்ர் தொழுகைக்கு முன் இரண்டு. (ஆதாரம் திர்மிதி)

3- யார் தொழுகையை ஜமாஅத்தாக நிறைவேற்ற (பள்ளிவாசலுக்கு) நடந்து செல்கிறாரோ அவருக்கு ஒரு ஹஜ் செய்த நன்மையும், நபிலான தொழுகைக்காக யார் நடந்து செல்கிறாரோ அவருக்கு ஒரு உம்ரா செய்த நன்மையும் கிடைக்கிறது.
(ஆதாரம் சஹீஹ் அல் ஜாமிஃ)

4- யார் சுபுஹ் தொழுகையை ஜமாத்துடன் தொழுகிறாரோ அவர் அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருக்கிறார். (ஆதாரம் ஸஹீஹ் அல் ஜாமிஃ)

5- யார் அழகிய முறையில் வுளுச் செய்து, கடமையான தொழுகைக்காக (பள்ளிவாசலுக்கு)நடந்து சென்று ஜமாஅத்தாக தொழுகிறாரோ அவரின் பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. (ஆதாரம் ஸஹீஹ் அல் ஜாமிஃ)

6- தொழுகையின் முதல் தக்பீரை அடைந்த நிலையில் யார் இறைவனுக்காக என்ற இக்லாசோடு நாட்பது நாட்கள் ஜமாஅத்துடன் தொழுகிறாரோ அவருக்கு இரண்டு விடுதலைகள் எழுதப்படுகிறது. நரகத்தில் இருந்தும் நயவஞ்சகத்தில் இருந்தும் விடுதலை கிடைக்கிறது. (ஆதாரம் ஸஹீஹ் அல் ஜாமிஃ)

7- நன்மையை நாடியும், இறை நம்பிக்கையுடனும் யார் ஒரு முஸ்லிமின் ஜனாஸாவை தொடர்ந்து சென்று, தொழுகை நடத்தி அடக்கம் செய்யும் வரை இருந்தால், அவருக்கு இரண்டு கீராத் அளவு நன்மை கிடைக்கிறது. ஒரு கீராத் உஹது மலையைப் போன்றதாகும்.

அடக்கம் செய்வதற்கு முன் தொழுகையில் மாத்திரம் கலந்து கொண்டால் அவர் ஒரு கீராத் அளவு நன்மையை அடைந்து கொள்வார்.
(ஆதாரம் சஹீஹ் அத்தர்கீப்)

8- இந்த வீட்டை யார் பாவமும், குற்றங்களும் செய்யாமல் ஹஜ் செய்கிறாரோ அவர் அன்று பிறந்த பாலகனைப் போல் திரும்பி விடுகிறார்.(ஆதாரம் அன்நசயி)

9- க:பாவை யார் ஏழு முறை தவா:ப் செய்து இரண்டு ரக்அத்துகளும் தொழுகிறாரோ அவர் ஒரு அடிமையை உரிமையிட்ட நன்மையைப் பெற்றுக் கொள்வார்.
(ஆதாரம் ஸஹீஹ் அல்பானி)

10- உண்மையாகவே யார் ஷஹாதத்தை வேண்டுகிறாரோ அவர் அதைப் பெற்றுக் கொள்ளாவிட்டாலும், அவருக்கு அந்த நன்மை வழங்கப்படுகிறது.
(ஆதாரம் ஸஹீஹ் அத்தர்கீப்)

11- யார் ஒருவர் ஒரு ஜனாஸாவை குளிப்பாட்டி அதன் (உடல்) குறைகளை மறைக்கின்றாரோ, இவரின் குறைகளை அல்லாஹ் மறைத்து விடுகிறான். ஒரு முஸ்லிமை யார் கபனிடுகிறாரே அவரக்கு சுவனத்தில் ஸின்துஸ் எனும் பட்டை அல்லாஹ் அணிவிக்கிறான். (ஆதாரம் ஸஹீஹ் அல்பானி)

12- மு:மீன்களான ஆண், பெண் அனைவருக்காகவும் யார் இறைவனிடம் பாவமன்னிப்பு தேடுகிறாரோ, ஒவ்வொரு மு:மினான ஆண், பெண்ணுக்காக இறைவன் நன்மையை எழுதுகிறான். (ஆதாரம் ஸஹீஹ் அல்பானி)

13- திருக்குர்ஆனில் இருந்து யார் ஓர் எழுத்தை ஓதுகிறாரோ அதைக் கொண்டு ஒரு நன்மை வளங்கப்படும். ஒரு நன்மை பத்து மடங்காகும். (அலிப் லாம் மீம்) ஒரு எழுத்து என்று கூறமாட்டேன். மாறாக அலிப் ஓர் எழுத்து, லாம் ஓர் எழுத்து, மீம் ஓர் எழுத்தாகும். (ஆதாரம் ஸஹீஹ் அல்பானி)

14- ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி என்று யார் ஒரு நாளைக்கு நூறு முறை கூறுகிறாரோ அவரின் பாவங்கள் கடல் அலைகள் போன்று இருந்தாலும் மன்னிக்கப்படுகிறது. (ஆதாரம் ஸஹீஹ் அல் கலிமத் தய்யிப்)

15- காலையிலும், மாலையிலும் யார் என் மீது பத்து முறை ஸலவாத் கூறுகிறாரோ அவர் எனது ஷபாஅத்தை மறுமையில் பெற்றுக் கொள்வார். (ஆதாரம் சஹீஹ் அல் ஜாமி:)

16- இறைவனுக்காக யார் ஒரு பள்ளியை கட்டுகிறாரோ அதை விட விசாலமான ஒரு மாளிகையை இறைவன் அவருக்காக சுவர்க்கத்தில் கட்டிவிடுகிறான்.
(ஆதாரம் ஸஹீஹ் அல்பானி)

17- ஸுப்ஹானல்லாஹில் அழீம் வபிஹம்திஹி என்று யார் கூறுகிறாரோ அவருக்கு சுவர்க்கத்தில் ஒரு பேரீத்த மரம் நட்டப்படுகிறது. (ஆதாரம் ஸஹீஹ் அல்பானி)

18- "லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்த், வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர்" என்று நூறு முறை யார் கூறுகிறாரோ அவருக்கு பத்து அடிமைகள் உரிமையிட்ட நன்மை கிடைக்கிறது, மேலும் நூறு நன்மை எழுதப்படுகிறது, மேலும் நூறு பாவங்கள் நீக்கப்படுகிறது, மேலும் அந்த நாள் முழுதும் ஷைத்தானிடம் இருந்து பாதுகாப்பு கிடைக்கிறது. இதை விட அதிகமாக சொன்னவரைவிட யாரும் சிறப்புக்குரியவராக இருக்க முடியாது.
(ஆதாரம் ஸஹீஹ் இப்னு மாஜாஹ்)

19- ஸூரதுல் கஹ்பின் முதல் பத்து வசனத்தை யார் மனனம் செய்கிறாரோ அவர் தஜ்ஜாலின் பித்னாவில் இருந்து பாதுகாக்கப்படுகிறார். (ஆதாரம் ஸஹீஹ் அல் ஜாமி:)

**20- (நோயினால்) சோதனைக்குற்படுத்தப்பட்ட ஒருவரைப் பார்த்து "அல் ஹம்துலில்லாஹில்லதி ஆபானி மிம்மா இப்தலாக பிஹி வபழ்ழளனி அலா கதீரின் மிம்மன் கலக தப்ஃழீலா" என்று யார் கூறுகிறாரோ அவரை அந்தச் சோதனை அனுகாது. (ஆதாரம் ஸஹீஹ் அல்பானி)**

**21- "லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்த், வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர்' என்று யார் பத்து முறை கூறுகிறாரோ அவருக்கு ஒரு அடிமையை உரிமையிட்ட நன்மை வழுங்கப்படுகிறது. (ஆதாரம் ஸஹீஹ் அல் ஜாமிஃ)**

**22- என் மீது யார் ஒரு முறை ஸலவாத் சொல்கிறாரோ அல்லாஹ் அவர் மீது பத்து முறை ஸலவாத் சொல்கிறான் (மலக்குமார்களிடம் அவரைப் புகழ்ந்து பாராட்டுகிறான்). (அதாரம் திர்மதி)**

**23- அன்சாரிகள் எனும் மதீனத்து ஸஹாபாக்களை முஃமினைத் தவிர வேறு யாரும் நேசிக்கமாட்டார்கள். நயவஞ்கனைத் தவிர வேறு எவரும் அவர்கள் மீது கோபங் கொள்ள மாட்டான். யார் அவர்களை நேசிக்கின்றார்களோ அல்லாஹ் அவர்களை நேசிக்கின்றான். யார் அவர்கள் மீது கோபங் கொள்கிறார்களோ அல்லாஹவும் அவர்கள் மீது கோபங் கொள்கிறான். (ஆதாரம் ஸஹீஹ் அல்பானி)**

**24- யார் கஷ்டத்தில் இருக்கும் ஒரு கடனாளிக்கு தனது கடனை திருப்பிக் கொடுப்பதற்கான அவகாசத்தை நீட்டிக் கொடுக்கிறாரோ, அல்லது கடனின் ஒரு பகுதியை மன்னித்து விட்டு விடுகிறாரோ அல்லாஹ் அவருக்கு மறுமை நாளில் எந்த நிழலும் இல்லாத போது அர்ஷின் நிலழை வழுங்குகிறான்.(ஆதாரம் திர்மிதி)**

**25- ஒரு முஸ்லிமின் குறையை யார் மறைக்கிறாரோ அல்லாஹ் அவரின் குறைகளை மறைத்து விடுகிறான்.(ஆதாரம் முஸ்லிம்)**

**26- யாருக்கு மூன்று பெண் பிள்ளைகள் இருந்து அவர்களுக்கு உணவளித்து, நீர் புகட்டி, ஆடை அளித்து அரவணைத்து வருவாரேயானால், மறுமையில் அவரை நரகிலிருந்து பாதுகாக்கும் ஒரு கேடயமாக இவர்கள் இருப்பார்கள். (ஆதாரம் ஸஹீஹ் அல்பானி)**

**27- தன் சகோதரனைப் பற்றி புறம் பேசப்படும் போது யார் அதை தடை செய்கிறாரோ அல்லாஹ் அவரை நரகத்தில் இருந்து பாதுகாத்து விடுகிறான்.**

**28- எவர் தனது கோபத்தை வெளிக்காட்ட திராணி இருந்தும் (அல்லாஹ்வுக்காக வேண்டி) அதை அடக்கி மறைத்துக் கொள்கிறாரோ அல்லாஹ் அவரை தனது சிரிஸ்டிகளுக்கு முன்னிலையில் அழைத்து தனக்கு பிடித்தமான ஹூருல் ஈன் எனும் கண்ணழகிகளை தேர்ந்தெடுக்குமாறு கூறுவான்.**

**29- யார் இறைவனுக்காக பணிவாக நடக்கின்றாரோ, அல்லாஹ் அவரை உயர்த்தி விடுகிறான்.**

**30- நீண்ட நாட்கள் வாழவும், தனது ரிஸ்கில் விஸ்தீரனத்தையும் யார் விரும்புகிறாரோ அவர் தனது குடும்பத்தைச் சேர்ந்து நடக்கட்டும்.**

**31- யார் ஒரே அடியில் ஒரு பல்லியைக் கொண்று விடுகிறாரோ அவருக்கு நூறு நன்மைகள் வழுங்கப்படுகிறது. இரண்டாவது அடியில் கொன்றால் அதை விட குறைந்த நன்மைகளும் மூன்றாவது அடியில் கொன்றால் அதை விட குறைந்த நன்மைகளும் வழுங்கப்படம்.**

தமிழில்: மவ்லவி இம்ரான் (கபூரி)

மீள்பார்வை: மவ்லவி ஹபீப் அலியார் (ரியாதி)